**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**TAMIL VIRTUAL ACADEMY**

**மேற்சான்றிதழ்க் கல்வி** (Higher Certificate Course)
**HG20 – நிலை II – (Grade II)**

**நேரடி எழுத்துத் தேர்வு** (Written Examination)
**நவம்பர் – டிசம்பர் 2019**

**நேரம் : 2.30 மணி** **மதிப்பெண் : 75**

**பகுதி – அ**

I **எல்லா வினாக்களுக்கும் ஒரு சொல் / தொடரில் விடை தருக.**
Answer all questions in a word / line. (10 x 1 = 10)

1. இராமலிங்க அடிகள் பிறந்த ஊர் எது?
2. கா. நமச்சிவாயர் நடத்திய இதழின் பெயர் என்ன?
3. கண்ணதாசன் இறுதியாக எழுதியக் காவியம் யாது?
4. திருவள்ளுவரின் பிறப்பிடம் எது?
5. பசி வந்தபோதும் புல்லைத் தின்னாதது எது?
6. 'அரையன்' என்பது யாரைக் குறிக்கிறது?
7. கம்பருக்குச் சமமான புலவர் யார்?
8. தேர்க்காலில் தன்மகனைக் கொன்றவன் யார்?
9. 'ஐ' என்பது எந்த வேற்றுமை உருபைச் சார்ந்தது?
10. அடிப்படை அசை வகைகளைக் கூறுக.

**பகுதி – ஆ**

II **எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை தருக.**
Answer any ten questions in three lines each. (10x2=20)

1. இறைவன் எவ்வாறு விளங்குகின்றான்?
2. தமிழ்நாடு அரசு கண்ணதாசனை எவ்வாறு சிறப்பித்தது?
3. குடிப்பிறப்பாளரின் சிறப்பு யாது?
4. 'பாம்பின் கால் பாம்பறியும் ' என்ற பழமொழியில் விளக்கப்படும் கருத்து யாது?
5. பெருங்காப்பியத்திற்கு உறுதிப் பொருள்கள் யாவை?
6. மூவருலாவின் பாட்டுடைத் தலைவர்கள் யாவர்?
7. வைக்கம் போராட்டம் குறித்து எழுதுக.
8. மற்ற மந்திரிகளுக்கு என்ன அச்சம் தோன்றியது?
9. சித்தன்னவாசலுக்குச் செல்லும் வழி என்ன?
10. பொம்மைத் தொடர்வண்டிகள் எங்கு பயனாகின்றன?
11. தொடர்வண்டி அடிப்படையில் எவ்வகையில் பயன்படுகின்றது?
12. குறுக்கங்களின் வகைகளை எழுதுக.

13. வினையாலணையும் பெயர் பற்றி எழுதுக. அதற்கு 2 எடுத்துக்காட்டு தருக.

14. வினைமுற்று வகைகளை எழுதுக.

15. நெடிலடி என்றால் என்ன?

## பகுதி – இ

**III** **எவையேனும் <u>ஐந்து வினாக்களுக்கு</u> ஒவ்வொன்றிற்கும் <u>ஆறு வரிகளில்</u> விடை தருக.**
Answer any five questions in six sentences each. **(5x4=20)**

1. கருணாகரத் தொண்டைமான் பற்றி விவரி.
2. திருக்குற்றாலக் குறவஞ்சியின் பாடல் கருத்தினை எழுதுக.
3. இயேசு நூலின் ஆசிரியர் அ.மு. பரமசிவானந்தம் குறித்து (அறிமுகம்) எழுதுக.
4. பெரியார் பற்றி அறிஞர் அண்ணா கூறிய கருத்துகளை எழுதுக.
5. தொடர்வண்டி**யின்** பலவகையை விவரி.
6. சித்தனவாசலின் பாட அறிமுகத்தை எழுதுக.
7. தொழிற்பெயரை விளக்குக.
8. எண்ணல் அளவை, எடுத்தல் அளவை ஆகுபெயர்களை விவரி.

## பகுதி – ஈ

**IV** **ஏதேனும் <u>ஒன்றனுக்குப் பதினைந்து வரிகளில்</u> விடை தருக.**
Answer any one of the following questions in fifteen sentences. **(1x10=10)**

1. அபிராமி அந்தாதியின் பாட அறிமுகம், ஆசிரியர் அறிமுகத்தினை எழுதுக.
2. நாட்டுக்கொடியின் பெருமையும் சிறப்பினையும் குறித்து எழுதுக.
3. ஆகுப்பெயர் என்பது பற்றியும், அதன் வகைகளையும் எழுதுக.

## பகுதி – உ

**V** **ஏதேனும் <u>ஒன்றனுக்கு மூன்று</u> பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.**
**Write an essay in three pages to any one of the questions. (1x15=15)**

1. 'அல்லா' பாடப்பகுதியில் உள்ள பொது அறிமுகம், பாட அறிமுகம், ஆசிரியர் அறிமுகம் கூறிய கருத்துகளைத் தொகுத்து எழுதுக.
2. பெரியாரும் அவரின் பொதுதொண்டும் குறித்து விவரிக்க.